ISSN 2454-3993

▪ மலர் 3 ▪ சிறப்பிதழ் 2 ▪ பிப்ரவரி, 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

3.085 IMPACT FACTOR
JOURNAL WITH ★★★ SIJ TAMIL STUDIES

**மெடோனா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
விரகனூர், மதுரை

**சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்**
மதுரை

இணைந்து நடத்தும்

**தொகுதி – 2**

பன்னாட்டுக் கருத்தரங்கம்




08.02.2019

## பதிப்பாசிரியர்கள்

திருமதி. சே.சலோமி இராஜர்கம்
அருள்சகோதரி முனைவர் திரவிய ரெஜினா ராஜம்
முனைவர் அ.செபாஸ்டின் மகிமைராஜ்
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் கோ.கருணாகரன்
முனைவர் செ.அன்புராணி
திருமதி. ஜோ.சகாய பவுலின்

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 2 | FEBRUARY 2019
Shanlax International Journal of Tamil Studies
A Peer-Reviewed-Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS

# சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | திருமதி.சே.சலோமி இராஜரீகம்<br>முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் அ.செபாஸ்டின் மகிமை ராஜ்<br>முனைவர் இரா.ஏஞ்சல்<br>முனைவர் கோ.கருணாகரன்<br>முனைவர் செ.அன்புராணி<br>திருமதி ஜோ.சகாய பவுலின் |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | பிப்ரவரி, 2019 |
| வெளியீடு | : | மெடோனா பெண்கள் கலை மற்றும்<br>அறிவியல் கல்லூரி<br>விரகனூர், மதுரை - 625 009. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 179 |

**ISSN : 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்**

# கவிஞர்கள் நோக்கில் பெண்ணியம்

முனைவர் அ.ஜனார்த்தனி பேகம்
உதவிப்பேராசிரியர், புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

மலர்: 3

சிறப்பிதழ்: 2

மாதம்: பிப்ரவரி

வருடம்: 2019

ISSN: 2454-3993

பெண்மை என்பது அனைவராலும் விரும்பி போற்றதக்க ஒன்றாகும். அதனால்தான் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

**"மங்கையராய் பிறப்பதற்கே – நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா"**

என்று பாடியுள்ளார். ஆரம்பத்தில் தாய்வழிச் சமூகமாக வாழ்ந்த மனித குலம் கொஞ்சம் கொஞ்சம்மாகப் பெண்ணிடமிருந்து சொத்துக்களையும் உரிமைகளையும் பறித்து ஆண்களின் கட்டுபாட்டில் கொண்டுவந்தது. அதன் பின்னர் உருவான ஆண்டான் அடிமைச் சமூகம் மற்றும் நிலப்பிரபுத்துவ சமூகத்திலும் ஆண்கள் பெண்களை ஆளவும்,அதிகாரம் செய்யவும் பெண்கள் அடங்கிப்போகவும் பணிவிடை செய்யவும் பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். கவிஞர்கள் ஒவ்வொருவரும் தம் படைப்புகளில் பெண்கள் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளனர். பெண்களை உயர்வாகவும் அவர்களுக்குச் சமூகத்தில் இழைக்கப்படும் அநீதிகளையும் கூறியுள்ளனர்.

**பெண்ணின் அடிமைநிலை**

'அரிது அரிது மானிடராய் பிறப்பதரிது' அதிலும் மங்கையராய்ப் பிறப்பதரிது மிகமிக அரிது என்றே கூறலாம். பெண்ணாய் பிறப்பதற்கும் பிறந்ததற்கும் ஒவ்வொருவரும் பெருமைகொள்ள வேண்டும். மீரா தம் கவிதையில்

**"மண் என்றும் மரம் என்றும்**
**மங்கையரைப் புறக்கணித்த**
**காலம் கழிந்ததென்றும்**
**மையலுக்கும் சமைலுக்கும்**
**மட்டும் இருக்கும்மொரு**
**கூட்டம் குறைந்தது வா**

என்று கூறுங்கள்

தம் கவிதை நூலான 'கோடையும் வசந்தமும'; என்ற நூலில் பெண்கள் வீட்டு வேலைகள் செய்வதற்கு மட்டுமே இருக்கும் அடிமை நிலையைக் கூறுகிறார்.பெண் உறவுமுறைகளால் சிக்கி அடையும் துன்பத்தினை

**"உரலுக்கு ஒரு பக்கம்**
**மத்தளத்துக்கு இரண்டு பக்கம்**
**மங்கைக்கோ**
**தந்தை கணவன் மைந்தன்**
**என்று**
**தாக்குதல் நடப்பது**
**மூன்று பக்கம்"**

என்று தமது கவிதைகளில் பெண்கள் படும் துன்பத்தை மீரா குறிப்பிடுகிறார். இளம் வயதில் விதவைகளாகும் பெண்கள் சமுதயாத்தில் மீண்டும் மறுவாழ்வு

பெறுவதற்கு வாய்ப்புகள் குறைவுதான் ஆனால் ஆண்களுக்கோ மனைவியை இழந்த சிறிது காலத்திற்குப் பிறகு மறுமணம் எளிதாக செய்கின்றனர் என்பதை தமது கவிதையில்

**"பாவையொருத்தி பொங்கும் இளமையில்**
**பூவையிழந்து பொட்டையிழந்து**
**விதவை ஆனால;"**
**"பெண்டையிழந்த பெரிய மனிதன்**
**துண்டை உதறித் தோளில் போட்டு**
**சின்ன பெண்ணினைத் தேடி மணந்து**
**இன்னொரு முறையவன் இன்புறலாமாம்"**

இதே போல் பாவேந்தர் தம் கவிதையில்

**"கூண்டில் கிளி வளர்ப்பார் - இல்லத்தில்**
**குக்கல் வளர்த்திடுவார்**
**வேண்டியது தருவார் - அவற்றின்**
**விருப்பத்தையறிந்தே**
**அண்டையார் காண்பதில்லை – ஐயகோ**
**அடிமைப் பெண் கதியே"**

கவிஞர் தமது கவிதையில் ஆனாதிக்கத்தின் மீது உண்டான கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**பெண் கவிஞர்கள்**

1990க்கு பிறகு பெண்களின் மீதான குடும்ப வன்முறை பாலியல் கொடுமைகள் பற்றிய பல பெண் கவிஞர்கள் துணிச்சலுடன் எழுதினர். அதில் தாமரை, குட்டி ரேவதி, மீ.உமாமகேஸ்வரி, செ.பிருந்தா சல்மா, சுகந்தி சுப்பிரமணியன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**"கொலையும் செய்வாள்**
**பத்தினி**
**கொஞ்சம் இரு**
**முன்னதாக**
**நீ என்ன செய்தாய்? – தாமரை**
**இத்தனை துயரங்களின்றி**
**நொடிப்பொழுதில்**
**நிகழ்ந்து விட வேண்டும்**
**மரணம்**
**மரணமேனும்" மீ. உமாமகேஸ்வரி**
**"நடக்கும் திசையெல்லாம்**
**முட்ட நேர்கிற சுவர்கள்**
**சிலைபோலென்னை**
**இருக்குகிற சுவர்கள்**
**நானொரு சுமாதியுள்**
**நிறுத்தி வைக்கப்பட்ட உணர்வு – செ. பிருந்தா**

கவிஞர் பஞ்சவர்ணம் குழந்தை வளர்ப்பில் ஆண் பெண் பாகுபாட்டினை

**"அருகம்புல்லில் முள் உரசி**
**உண்டு மகிழ்வதில்**
**உள்நாக்கு வரை சிவக்கும்**
**அனுபவம் இல்லாது**
**செய்துவிட்டேன் உனக்கு"**

இன்றும் கூட நம் குழந்தைகளிடையே இதைக் காணலாம் ஊட்டச்சத்துணவில் கூட உரிமை 'மறுப்பு உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு' என்று ஒட்டிய வயிறும் ஒல்லியான உடலும்தான் அழகு அப்போதுதான் கணவனால் விரும்பப்படுவாய் என்று பெண் குழந்தைகளுக்குக் கற்பிக்கிப்படுகிறது

உண்மையில் எது அழகு? பெண்ணின் ஒப்பனையும் கூட ஆணுக்காகவே என்ற கருத்தும் நிலவுகிறது தன் கணவன் உடனிருக்கும் வரை ஒப்பனை செய்துகொண்டு பூவும் பொட்டுமாக விளங்குபவள் கணவன் இறந்த உடன் கைம்மை நோன்பை ஏற்கவேண்டும் வளையல் உடைக்கும் சடங்கு காலங்காலமாக இலக்கியங்களிலும் சொல்லப்பட்டு வந்துள்ளது. பெண்கள் ஒவ்வொருவரும் இந்த அழகு பற்றிய தத்துவத்தால பல சித்ரவதைக்க ஆளாகிக் கொண்டிருக்கின்றனர். வீட்டைவிட்டுப் படி தாண்டி வருவதெல்லாம் இருக்கட்டும் பெண்ணைத் தன் உடலையே தாண்டி வெளிவர இயலாத நிலையில் நிறுத்தி வைத்து அவளுடைய சிந்தனை, அறிவாற்றல், படைப்பாற்றல் செயல்திறன் அரசியல் மதிநுட்பம் ஆளுமை அனைத்தையும் அவள் உடம்புக்குள் வைத்துப் பூட்டிச் சாவியை ஆளும் சித்தாந்தத்தின் கையில் ஒப்படைத்துக் கொண்டுடிருக்கிறோம்.

**பெண் தொழிலாளி**

பெண்கள் பணிபுரிவது அலுவலகமாக இருந்தாலும் அல்லது தொழிற்சாலையாக இருந்தாலும் அங்கு உள்ள ஆண்களால் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதை நாள்தோறும் நாம் காணும் காட்சிகளும் கேட்கும் செய்திகளுமே உறுதிப்படுத்துகின்றது அவ்வகையில் கவிஞர் பா.விசய்

**“ஒரு பெண் தொழிலாளி**
**தீப்பெட்டியாய் தன்னை**
**உபயோக்கிக்கும் அலுவலகத்தில்**
**சோம்பல் முறிக்க அஞ்சி**
**கழிப்பறைக்குள் சென்று**
**சோம்பல் முறித்துத் திரும்புவதை**
**அறிவாயா நீ “**

மேலதிகாரிகளின் தீண்டலுக்கும் சகபணியாளர்களின் சீண்டலுக்கும் ஆளாகுபவர்களாகப் பெண் பணியாளர்கள் இருக்கின்றதை எண்ணி, மனம் வருந்திய கவிஞர் மேறகண்டவாறு கூறியுள்ளார். பெண்கள் தங்களது சுய முன்னேற்றத்திற்காக பல்வேறு பணிகளில் ஈடுபடக்கூடிய இன்றைய காலகட்டத்தில் தவறான அணுகுமுறைகளை ஆண்கள் கையாளுகின்றனர் என்பதை இச்சமூகத்திற்கு உணர்த்துகிறது.

**பெண்ணின் வாழ்க்கை**

பெற்றோர் பிள்ளைகளின் விருப்பத்தைத் தவறாது நிறை வேற்ற வேண்டும் என்று நினைக்கின்றார்கள். குழந்தைப்பருவம் முதற்கொண்டு அவர்கள் விரும்பும் பொருட்களை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் திருமணம் என்று வரும்போது மட்டும் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற மறுக்கின்றனர். ஒரு பெண் தனக்கு தகுதியுடைய ஆணை விரும்பும்போது சாதி, பணம் தனக்கு பிறதகுதிகள் ஆகியவற்றைக் காரணம் காட்டி தாங்கள் நினைக்கும் ஒரு வாழ்க்கை முறையையே பெண்ணிற்கு தர விழைகின்றனர் இதனை சல்மாவின் ‘சுவாசம்’ என்ற கவிதை புலப்படுத்துகின்றது.

**“எப்பொழுதும்**
**எனது எல்லாக் காரியங்களும்**
**நான் இல்லாத போதே**
**நிகழ்ந்து விடுகின்றன**
**நான் முயன்றுதான் பார்க்கிறேன்**
**என்றாவது**
**எதுவாயினும்**
**நிகழ்வதற்கு முன்பே**
**நான் அதைத்தொடுவதற்கு**
**ஆயினும்**
**என் முயற்சிகளைத் தோற்கடித்து**
**எனக்காக நிகழும் அவை**
**நாளில்லாமலேயே நடந்து விடுகின்றன”**

தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படவிருக்கும் இன்ப துன்பங்களை ஏற்று வாழவென்ற பெண்ணுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமலேயே அவளுடைய எதிர்கால வாழ்க்கைத் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன என்பதையே மேற்கண்ட கவிதை தெரிவிக்கின்றது.

பெண்கள் பணிக்குச் சென்று பொருள் ஈட்டுவது மேலும் அவர்களுக்கு ஏற்படும் ஒரு சுமையாகவே மாறிவிடுகிறது. அதிகாலையில் எழுந்து தன்இல்லறக் கடமைகளை முடித்து அலுவலகம் செல்லும் பெண்ணின் நிலையை

**“அதிகாலை நான்கு மணி**
**ஆலாரமிசைக்கின்ற சுப்ரபாதம்**
**பாவம்! இவளின் பள்ளியெழுச்சி**
**காயரியும் அவசரத்தில் கையரிந்து**
**சீறுகின்ற குக்கருக்கும் கீழ்படி**
**சட்டையில்**
**பட்டனில்லையென புயலாய் ஆடிய புருஷன்பின்**
**பூனையாய் ஓடி உடன் தைத்து”**

என்று பெண் அன்றாடம் பணிக்குச் செல்லும் போது ஏற்படும் மனத் துன்பத்தை கூறுகிறார்.

**திருமணமும் தாய்மையும்**

குடும்பங்களில் கணவன் எளிதில் நெருங்க முடியாத இடைவெளியில் தான் இருப்பதையே பெருமையாகக் கருதுவர் இதனை

**“புகைப்படத்திற்காகச் சிரிக்கும் அப்பா**
**பக்கத்தில் அம்மா அதே அச்சத்தோடு”**

என்கிறார் தி.பரமேஸ்வரி வீட்டில் இயல்பாக இல்லாத இவ்போன்ற கணவரிடமோ அப்பாவிடமோ அணுகி எதுவொன்றும் சொல்ல இயலாத நிலையிலேயே இன்றைய பெண்களின் நிலை உள்ளது. இன்று இருபாலரும் வேலைக்குப்போகும் சூழ்நிலையில் இருக்கின்றார்கள் அவ்வாறுபோகும் போது கணவன் மனைவியிடம் புரிதல் இன்மை உண்டாகிறது என்பதனை

**“ஒவ்வொரு இரவுகள் முடிந்து**
**வீடு திரும்பும் வேளையில்**
**நான் இழந்தது**
**ஒன்றுமில்லையென**
**நிரூபிக்க வேண்யிருப்பதும்**
**நிருபணத்தை**
**ஏற்றுக் கொள்வதும்**
**நம் வழக்கங்களாய் இருப்பதையே**
**வாழ்தல் என்கிறார்கள்”**

என்று இரவில் வேலைக்குச் சென்றுவிட்டு திரும்பும் மனைவி கணவனுக்குத் தான் கற்போடு இருக்கிறேன் என்பதை நாள்தோறும் உறுதிப்படுத்த வேண்டிய சூழலை எடுத்துரைக்கிறார் அ. வெண்ணிலா

பெண்கள் தங்கள் சுமைகளைக் கீழே இறக்கி வைத்துவிட்டு கண்களைத் திறந்து இச்சமுதாயத்ததைக் காண வேண்டும் என்பதை

**“தலைச் சுமையை**
**கீழே போடு**
**தோளின் சிலுவையை**
**இறக்கிவை**
**நெஞ்சில் கனத்தை**
**லேசாக்கு**
**இறுகுகிற**
**இதழ்களைப் பரி**

**சரி**
**கண்களைத் திற**
**வானும் பூமியும் பார்"7**

என்று பெண்கள் விழிப்புணர்வு அடைத்து சுதந்திர வாழ்வை மேற்கொள்ள வேண்டுமென்று எழுச்சியுடன் முன் வைக்கிறார் கவிஞர்

**முடிவுரை**

இன்றைய இலக்கியத்தில் பெண்ணியம் என்பது உலகளாவிய இல்க்கியப் போக்காக அமைகிறது பெண்களுக்கு சமுதாயத்தின் பன் முனைகளிலிருந்தும் ஏற்படும் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வு காண வழிகாட்டுவது பெண்ணியம் கடந்த சில ஆண்டுகளாகப் பெண்கள் பற்றியும் அவர்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளைப் பற்றியும் உலகம் முழுவதும் அதிகமாகவே பேசப்பட்டு எழுதப்படுகின்றன. பெண்ணின் சிக்கல்களை பெண்ணியத் திறனாய்வு இன்று மிகவும் வீரியத்துடன் செயல்பட்டு வருகிறது. அதில் பெண் கவிஞர்களின் கவிதைகள் பெரும் பங்கு வகிக்கின்றது.

ஒரு பெண் சாதனை படைக்க நினைத்துவிட்டால் அவளது பிறப்போ, இனமோ, மொழியோ அவள் மனதில் குறுக்கே நிற்கவே கூடாது என்று அமெரிக்காவில் டெக்சாஸ் செனட்டிற்கு முதன்முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆப்ரிக்கா – அமெரிக்கப் பெண் என்ற பெருமையைப் பெற்றிருக்கும் 'ஷபார்பரா ஜோர்டன்' என்ற பெண்மணியின் வார்த்தகளை நம் நினைவில் நிறுத்தினால் பெண்களாகிய நம்மால் எத்தனை உயர்ப் பதவிகளையும் சாதிக்க முடியும் தன்னம்பிக்கையே பெண்கள் முன்னேற்றத்தின் அடித்தளமாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. மீரா, கோடையும் வசந்தமும் ப. 103
2. மேலது ப.104
3. மேலது ப.108
4. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைத் தொகுப்பு ப.205
5. கி.ஈஸ்வரி, தற்கால இலக்கியங்களில் மகளிர் சிந்தனை ப.129
6. பா.விஜய், வானவில் பூங்கா,ப.126
7. சல்மா, பச்சை தேவதை, ஒருமாலையும் இன்னொரு மாலையும்
8. தி.பரமேஸ்வரி, எனக்கான வெளிச்சம், ப-53
9. அ.வெண்ணிலா, பெண் எழுதும் பலம் ப-40